# DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 275 of 2022 |
| Deposition of witness for | : | PW8 |
| Name | : | ஸ்ரீராமலு |
| Father's Name | : | Rajaraamaidu |
| Village | : | Chinnamaramarapalli |
| Taluk | : | Krishnagiri |
| District | : | Krishnagiri |
| Profession | : | Petorl Bunk |
| Age | : | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 22nd day of August 2024.

Accused present.

<u>முதல் விசாரணை :-</u>

நான் சின்னமனவாரணப்பள்ளி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். பெட்ரோல் பங்க்கில் விற்பனையாளராக பணியாற்றி வருகிறேன். விபத்தில் இறந்து போன கணேசன் எனது மாமா ஆவார். 04.11.2018 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு நான் வீட்டிலிருந்த போது, எனது உறவினர் போன் மூலமாக விபத்து குறித்து தகவல் தெரிவித்தார். நான் பின்னர் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது, எனது மாமாவுக்கு தலை மற்றும் வலது கால், தாடையில் காயம் ஏற்பட்டு ஆபத்தான நிலையில் சிகிச்சையில் இருந்தார். மேல்சிகிச்சைக்காக பெங்களுரு மருத்துவமனைக்கு செல்லும் வழியில் ஒசூர் அருகே என் மாமா இறந்து விட்டார். ஒசூர் அரசு மருத்துவமனையில் வைத்து நடந்த பிரேத விசாரணையில் நான் கலந்து கொண்டேன். இவ்வழக்கு சம்பந்தமாக குருபரப்பள்ளி போலீசார் என்னை

விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-

விபத்து குறித்து யார் எனக்கு தகவல் தெரிவித்தார்கள் என்பது தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. வழக்கு விபத்தை நான் பார்க்கவில்லை. எனவே, யாருடைய கவனக்குறைவால் விபத்து நடைபெற்றது என்பது எனக்கு நேரடியாக தெரியாது. இறந்து போன நபர் எனது உறவினர் என்பதால் நான் பிரேத விசாரணையில் மட்டும் கலந்து கொண்டேன் என்றும் வழக்கு பற்றிய பிற சங்கதிகள் எனக்கு தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை :-

இல்லை.

ஒம் /- திரு.ஆர். சாமுவேல் பெஞ்சமின்
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.

DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 275 of 2022 |
| Deposition of witness for | : | PW9 |
| Name | : | திரு. சரவணன் |
| Father's Name | : | Venkatasamy |
| Village | : | அணதிப்பள்ளி |
| Taluk | : | குப்பம் |
| District | : | சித்தூர் |
| Profession | : | Driver |
| Age | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 22nd day of August 2024.

Accused present.

<u>முதல் விசாரணை :-</u>

நான் ஏநாதப்பள்ளி கிராமம், கிருஷ்ணதாசப்பள்ளி அஞ்சல், குப்பம் சித்தூர் மாவட்டம், ஆந்திரா மாநிலத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ஓட்டுநர் தொழில் செய்து வருகிறேன். வழக்கு விபத்தில் இறந்து போன கணேசன் எனது மாமா ஆவார். 04.11.2018 காலை 11.00 மணிக்கு நான் எனது வீட்டில் இருந்த போது எனது அத்தை பாப்பம்மாள் வழக்கு விபத்து குறித்து எனக்கு தகவல் தெரிவித்தார்கள். அதன்பிறகு நான் ஒசூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். ஒசூர் மருத்துவமனையில் நான் பார்த்த போது அவர் இறந்து விட்டார். இவ்விபத்தில் அவருக்கு தலையில் மற்றும் இடது காலில் காயம் ஏற்பட்டிருந்தது. விபத்து குறித்து கணேசனின் மனைவி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். ஒசூர் அரசு மருத்துவமனையில் வைத்து நடைபெற்ற பிரேத விசாரணையின் போது நான் கலந்து கொண்டேன். இவ்வழக்கு சம்பந்தமாக குருபரப்பள்ளி போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-

வழக்கு விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. எனவே யாருடைய தவறு விபத்திற்கு காரணம் என்பது எனக்கு தெரியாது. இறந்து போன நபர் உறவினர் என்பதால் போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை :-

இல்லை.

ஒம் /- திரு.ஆர். சாமுவேல் பெஞ்சமின்
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.